நாள்.27.02.2026
அசல் வழக்கு எண். 126/2020
பி.வா. சா.1
பெயர். சரவண பெருமாள்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
குறுக்கு விசாரணை

வழக்கு சொத்து பாப்பான்குளம் கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து வேறு சொத்துக்களும் ஆதியில் பொன்னையா நாடார், லெட்சுமண பெருமாள் நாடார், இளவரசு பெருமாள் நாடார் ஆகியோர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மூன்று பேரும் சேர்ந்து எந்த ஆண்டில் கிரையம் பெற்றார்கள் என்றால் என் தந்தை காலத்தில் கிரையம் பெற்றார்கள் வருடம் தெரியாது. பொன்னையா நாடார், லெட்சுமண பெருமாள் நாடார், இளவரசு பெருமாள் நாடார் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். மேற்படி மூவரும் சேர்ந்து எந்த வருடன் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் எனது தந்தை காலத்தில் செய்தார்கள், வருடம் தெரியாது.

மூன்று பேருக்கும் இடையில் தலா 1/3 பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் பெயர் பொன்னையா நாடார். பொன்னையா நாடாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் நானும், செல்லபெருமாள் என்ற 2 ம் பிரதிவாதியும் வாரிசுகள். பொன்னையா நாடாரின் பாகத்தினை நானும் 2 ம் பிரதிவாதியும் பாகம் வைத்து கொண்டோம் என்றால் சரிதான். நானும் 2 ம் பிரதிவாதியும் அனைத்து சொத்துக்களையும் சரிபாதியாக பங்கு வைத்து கொண்டோமா அல்லது சொத்துக்களாக பங்கு வைத்து கொண்டோமா என்றால் ஒரு வயலில் மட்டும் சரிபாதியாக பங்கு வைத்தோம் மற்ற சொத்துக்களை சொத்துக்களாக பிரித்து கொண்டோம்.

எனது பங்கிற்கு எவ்வளவு சொத்துக்கள் பாகம் செய்து கொண்டோம் என்றால் ½ ஏக்கர் எனக்கும் ½ ஏக்கர் எனது தம்பிக்கும் பிரித்து கொண்டோம். எனது சகோதரர் அவரது ½ ஏக்கர் நிலத்தில் பயிர் செய்கிறாரா என்றால் தண்ணீர் இல்லாததால் பயிர் செய்யவில்லை. எனது தந்தை மற்றும் அவரது சகோதரர்கள் சேர்ந்து கிரையம் பெற்ற நிலங்கள் கிணற்று பாசானமும், குளத்து பாசானமும் உண்டு என்றால் சரியல்ல, கிணற்று பாசானம் மட்டும் தான். மேற்படி சொத்திற்கு வடக்கு பக்கம் குளத்து பாசானம் செல்லக்கூடிய வயல்கள் உண்டு என்றால் சரிதான்.

குளத்திலிருந்து பிரதான வாய்காலாக வடக்கிலிருந்து தெற்காக எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்துக்களின் வழியாக தான் செல்கிறது என்றால் சரியல்ல, கால் கிடையாது. எனது தந்தை மற்றும்

அவரது சகோதரர்கள் கிரையம் பெற்ற சொத்துக்களுக்கு தெற்கு பக்கம் வயல்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த வயல்களிலும் நெல், வாழை காலத்திற்கு ஏற்ப பயிர் செய்வது வழக்கம் என்றால் சரிதான். பொன்னையா நாடார், லெட்சுமண பெருமாள் நாடார், இளவரசு பெருமாள் நாடார் அவர்கள் கிரையம் பெற்ற சொத்துக்களில் பாசானத்துக்கு கிணறு உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி மூன்று நபர்கள் காலத்திலிருந்து பங்கு உரிமை அடிப்படையில் கிணற்று நீர் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். எவ்வாறு பங்கு செய்யப்பட்டது என்றால் கமலை ஏற்பு ஒருநாள் ஒருவர் என நீர் இறைத்தார்கள் என்றால் சரிதான். நான் இளவரசு பெருமாளிடமிருந்து எந்த வருடம் ஒத்தி வாங்கினேன் என்றால் வருடம் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2 ஆவணம் என்னுடைய ஒத்தி ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் தான் 1991 கிரைய ஆவணமான பி.வா.சா.ஆ 3 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

நான் ஒத்தி பெற்ற காலத்தில் எத்தனை பங்கு அனுபவம் செய்து வருகிறேன் என்றால் என்னுடைய பங்கையும் என் சித்தப்பாவின் பங்கையும் அனுபவம் செய்து வருகிறேன். நான் அனுபவம் செய்யும் இடத்தில் என்ன பயிர் செய்கிறேன் என்றால் நெல் மற்றும் பருத்தி பயிர் செய்கிறேன். எனது சகோதரர் அவருடைய நிலத்தில் பயிர் செய்கிறார் என்றால் சரியல்ல. நான் 1 ½ ஏக்கர் நிலத்தில் பயிர் செய்து வருகிறேன். லெட்சுமண பெருமாள் நாடார் அவருடைய பங்கை யாருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சுடலைமுத்து நாடாருக்கு கிரையம் கொடுத்துள்ளார். எந்த வருடம் கிரையம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது.

சுடலைமுத்து நாடார் கிரையம் பெற்றதில் இருந்து 25 வருடங்கள் பயிர் செய்து அனுபவம் செய்திருப்பாரா என்றால் செய்திருப்பார். சுடலைமுத்து நாடார் அவருடைய பாகத்தில் பங்காளி முறையில் அனுபவம் செய்து வருவதை பற்றி எனக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது என்றால் சரிதான். கமலை ஏற்றம் என்பது மாடு இறைத்தார்களா அல்லது மனிதர்கள் மூலம் இறைத்தார்களா என்றால் மாடு வைத்து தான் இறைத்தார்கள். சுடலைமுத்து நாடார், எனது சகோதரர் மற்றும் நான் கூட்டாக அனுபவம் செய்யும் பொழுது தான் மின் இணைப்பு பெறப்பட்டது என்றால் சரியல்ல, தண்ணீர் இல்லை என அவர் நிலத்தை விட்டு சென்று விட்டார்கள். பிராதில் சொல்லியுள்ள 2 ம் அயிட்ட சொத்து பற்றி தெரியுமா என்றால் 703 ல் 2 ஏக்கர் 99 சென்டில் வாதிக்கு 1/3 பங்கு உண்டு.

சுடலைமுத்து நாடார் எப்பொழுது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவர் எங்கள் ஊருக்கு அருகில் உள்ள ஊர்காரர் என்றால் சரிதான். அவருடைய குடும்பம் மற்றும் குடும்பத்தின் உறுப்பினர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான். சுடலைமுத்து நாடார் இறப்பிற்கு பிறகு அவருடைய வாரிசுகள் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் இல்லை, தண்ணீர் இல்லை என அனுபவம் செய்யவில்லை. சுடலைமுத்து நாடாரின் பெண் வாரிசான கேசவர்த்தினி எனக்கு தெரியும் என்றால் சரிதான். கேசவர்த்தினி எத்தனை வருடங்கள் நிலத்தில் பயிர் செய்தார் என்றால் பயிர் வைக்கவில்லை. சுடலைமுத்து இறப்பிற்கு பின்பு ஆண் வாரிசுகள் மலேசியாவில் வசித்ததால் பெண் வாரிசான கேசவர்த்தினி வாதிக்கு கிரையம் கொடுக்கும் வரை நிலத்தில் பயிர் செய்தார் என்றால் சரியல்ல.

2 ம் அயிட்ட சொத்தில் உள்ள கிணறு எவ்வளவு ஆழம் என்றால் 10 கஜம். 10 கஜம் என்பது 30 அடி ஆகும். பொதுவாக குளம் இருக்கும் பகுதியில் கிணறு 10 அடியில் நீர் இருக்கும் என்றால் முன்பு இருந்தது தற்போது அப்படி இல்லை. கிணற்றில் இருந்து குளம் எவ்வளவு துாரத்தில் இருக்கும் என்றால் 50 மீட்டர் துாரத்தில் இருக்கும். குளம் மேட்டு பகுதியிலும் வயல் தாழ்ந்த பகுதியிலும் இருக்கும் என்றால் சரியல்ல, வயல் மேட்டு பகுதியில் குளம் தாழ்ந்த பகுதியாக உள்ளது. குளம் மேட்டு பகுதியிலும், வயல் தாழ்ந்த பகுதியில் இருந்தால் தான் நீர் செல்ல முடியும் என்றாலும் நான் பொய்யாக மாற்றி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

2 ம் அயிட்ட சொத்தான கிணறும் நிலமும் சேர்த்து 4 ஏர் என்றால் சரியல்ல. மேற்படி இடத்தில் பம்பு செட் அறை உள்ளது என்றால் சரிதான், அது என் சித்தப்பா கட்டியது தற்போது இடிந்த தரைமட்டமாக உள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 1 நான் தாக்கல் செய்துள்ள புகைப்படத்தில் கிணற்றிற்கு தென்பக்கம் அறை இடிந்துள்ளது போல் உள்ளது என்றால் சரிதான். 2 ம் தபசில் சொத்தில் உள்ள கிணற்றிக்கு 1984 ல் மின் இணைப்பு பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 1984 க்கு முன்பு என் சித்தப்பாவிடம் கிரையம் பெற்றேனா என்றால் இல்லை, அவரின் இறப்பிற்கு பிறகு அவரின் வாரிசுகளிடமிருந்து கிரையம் பெற்றேன். நான் சொல்லும் சித்தப்பா இளவரசு பெருமாள் என்றால் சரிதான்.

மின் இணைப்பு பெறுவதற்கு முன்பு எனது சித்தப்பா லெட்சுமண பெருமாள், இளவரசு பெருமாள் ஆகியோர்களிடம் சம்மந்தம் வாங்கினேனா என்றால் நான் கேட்டேன் ஆனால் எனது சித்தி தண்ணீர் இல்லாத இடத்திற்கு என்னுடன் மின் இணைப்பு பெற சம்மதிக்கவில்லை. நான்

பங்காளிடம் தான் கேட்கவேண்டும் என்றாலும் அவரின் மனைவியிடம் கேட்டது தவறு என்றால் சரியல்ல. கிணற்றில் இருந்து எத்தனை அடி துாரத்தில் போர்வேல் அமைத்துள்ளேன் என்றால் நான் இதுவரை அளந்தது இல்லை. சுமார் 10 அடி இருக்குமா என்றால் அளந்து பார்த்தால் தான் தெரியும், 15 அடி இருக்கும். கிணற்றை ஒட்டி நான் அமைந்துள்ள போர்வேல் எத்தனை அடி ஆழம் இருக்கும் என்றால் 300 அடி இருக்கும்.

போர்வேல் அமைத்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் 15–20 வருடங்களுக்கு மேல் இருக்கும். குறிப்பாக சொல்ல முடியுமா என்றால் 15 வருடங்கள் இருக்கும். நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்தது எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் மேற்படி போர்வேல் புதியதாக அமைக்கப்பட்டதாக சொல்லப்பட்டது என்றால் சரியல்ல, போர்வேல் அமைத்து 15 வருடங்கள் இருக்கும். நீதிமன்ற ஆணையர் மற்றும் மற்ற வழக்கறிஞர் பார்வையிட்ட நேரத்தில் கிணற்றில் இருந்து மின்மோட்டாருக்கு வரும் பைப்பும் மின்மோட்டாரிலிருந்து நிலத்திற்கு போகும் பைப்பும் காணப்பட்டது என்றால் சரியல்ல.

மின் இணைப்பு எண் என்னவென்றால் எஸ்சி 66 ஆகும். மேற்படி இணைப்பை நான் போர்வேலுக்கு பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி மின் மோட்டார் இணைப்பிலிருந்து போர்வேலுக்கு மின் இணைப்பை பயன்படுத்த மின்வாரியத்தில் அனுமதியோ, உரிமையோ பெறவில்லை என்றால் சரியல்ல, அனுமதி பெற்று தான் உபயோகிக்கிறேன். நான் அனுமதி பெற்றது தொடர்பான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மூன்று பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட பொதுவான கிணற்றில் இருந்து நான் போர்வேல் அமைத்து மின் இணைப்பு பெற்று மோசடியாக என் பெயரில் உள்ள மின் இணைப்பை பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது சகோதரருக்கு மேற்படி மின்மோட்டாரிலிருந்து நீர் கொடுக்க மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

மின் இணைப்பு கிணற்றிற்காக எடுக்கப்பட்டதே தவிர போர்வேலுக்கு எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் எனது குடும்பத்தில் வாரிசு என்ற நிலையில் மற்ற வாரிசுகளை விட அதிகமான பங்கும் பெற்று எனது பெயருக்கு ஏற்பட்ட மின் இணைப்பை தவறுதலாக போர்வேலுக்கு பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. போர்வேலுக்கு என்று தனியாக மின் இணைப்பு பெற்றேன் என்றால் சரியல்ல. மற்ற பங்காளிகளுக்கும் நீர் பாசானத்திலும், மின் இணைப்பிலும் பங்கு உண்டு என்றால் சரியல்ல. கேசவர்த்தினி என்பவர் அனுபவம் செய்த காலத்தில்

கிணறு மோட்டார் சம்மந்தபட்ட பழுதுகள் பார்க்கும் நேரத்தில் அவரிடமிருந்து தொகை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

வழக்கு தாக்கல் செய்த பிறகு கேசவர்த்தினியிடம் பார்த்து பேசினேன் என்றால் சரியல்ல. வாதிக்கு கிணற்றில் பங்கு உள்ளதை போன்று மின் இணைப்பிலும் பங்கு உள்ளது என்றால் சரியல்ல. நான் மற்ற பங்காளிகளிடம் அனுமதி பெறாமல் தனியாக பொது கிணற்றிற்கு என மின் இணைப்பு பெற இயலாது என்றால் சரியல்ல. நான் தனிப்பட்ட முறையில் மின் இணைப்பு பெற்றேன் என காட்ட என்னிடம் ஆவணம் கிடையாது என்றால் சரியல்ல. வாதிக்கு கிணற்றில் எவ்வாறு பாத்தியம் உள்ளதோ அதே போல் மின் இணைப்பு மூலம் பாசனம் செய்ய உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

வாதியின் பங்கை நான் கிரையம் கேட்டேன் என்றால் சரியல்ல. நான் வாதியின் பங்கை கிரையம் கேட்டு அவர் தரவில்லை என்பதால் தான் 2 ம் தபசில் சொத்து உள்ள கிணற்றில் மின்மோட்டாரை அகற்றி வாதியை பயிர் செய்யவிடாமல் இடைஞ்சல் செய்வதாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் கிணற்றில் தண்ணீர் இல்லை என்றால் சரியல்ல. ஒரு பாசான கிணற்றுக்கு அருகில் நீர் வளம் பாதிக்கும் வகையில் போர்வேல் அமைப்பதற்கு எனக்கு சட்ட வழிவகை இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு போர்வேல் அமைத்ததற்கு எனக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கலாம் என்றாலும் வாதி கேட்கும் பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றாலும் சரியல்ல.